

எழுதி எழுதிச் செல்கின் றேன், நான்!

எழுதி எழுதிச்
செல்கின் றேன், நான்!
என்ன பயன்—என
எண்ணிப் பார்க்கிலேன்!
உழுது விதைத்தவை
ஒருநாள் விளையுமோ?
ஊமை விதைகளாய்ச்
சாவியாய் ஒழியுமோ?
புழுதியுள் மறையுமோ?
பூக்களாய் மலருமோ?
அழுகியும் உலுத்தும்
அழுங்கிப் போகுமோ?
பழுதென் றுரைத்தவை
பழித்திடப் படுமோ?
பயன்ப டாதென
விலக்கிடப் படுமோ?
தொழுது போற்றுமோர்
காலந் தோன்றுமோ?
துயரச் சுமைக் கொரு
தூண்என நிற்குமோ?

பசித்த அறிவினால்
புசித்திடு வார்களோ?
பரபரப் புணர்வொடு
கொறித்திடு வார்களோ?
விசித்து விசித்து, நான்
அழுத அழுகையும்,
விடிய விடிய, நான்
வடித்த கண் ணீரும்,
மக்கள் இனத்தின்
கடைசி மாந்தனின்
ஒக்க அழுகையோ
டொன்றாய் இணையுமோ?
ஒழுகுகண் ணீரோ(டு)
ஓடிக் கலக்குமோ?
எழுதி எழுதிச்
செல்கின் றேன், நான்!
என்ன பயன்—என
எண்ணிப் பார்க்கிலேன்!

குரல்: 5 இசை: 1.

விலை: 25 காசு

எனக்குக் குழந்தைதான்;
இருப்பினும் அவள்--தாய்!

எனக்குக் குழந்தையாய்
இருந்தவள், இவள்தான்!
என்னிரு தோளினில்
வளர்ந்தவள், இவள்தான்!
தனக்குப் பிறந்தது—எனக்கூறி, ஒருநாள்
தாமரை மொக்கொன்றை
என்மடி யிட்டாள்-உவந்
திட்டாள்-ஒரு
தாயெனத் தனைக்கூறி விட்டாள்!

குதலை மொழியினைச்
சிதர்ந்தவள், இவள்தான்!
கொஞ்சியென் நெஞ்சில்
கிடந்தவள், இவள்தான்!
மதலை பிறந்தது—எனக்கூறி, ஒருநாள்
மணிப்புருக் குஞ்சொன்றை
என்கையில் தந்தாள்-
மகிழ்ந்தாள்—ஒரு
மகவுக்குத் தாயென் றுவந்தாள்!

தாயின் அணைப்பினில்
உறங்கியள் - இவள்தான்!
தந்தையென் முதுகினில்
புதைந்தவள் - இவள்தான்!
சேயொன்று பிறந்தது - எனக்கூறி ஒருநாள்
செம்மா துளையொன்றை
கைகளில் வைத்தாள் –
சுவைத்தாள் — நான்
சேயில்லை; தாயென் றுரைத்தாள்!

பாடிடுங் குயில்; இவள்
பசும்பச்சை மயில்தான்!
பாடகச் சீரடி
தடுமாறுங் கால்தான்!
ஆடி யசைந்திட வந்தனள், ஒருநாள்;
அழகுக் கிளியொன்றை
என்மடி யிட்டாள்! — மகிழ்ந்
திட்டாள் — தான்
'அன்னை' எனக்கூறி விட்டாள்!

துரை - மாணிக்கம்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-5. | தி. பி. | ௨௰௰2 | துலை-சுறவம்; நவ-சன 71 | இசை-1.

உயர உயரப் பறந்தாலும்...

'உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது' என்பது பழமொழி! மாந்தன் எவ்வளவுதான் அறிவியலில், தொழில் துறையில் முன்னேறினாலும், தான் மாந்தன் என்ற நிலையினின்று இழிவானாயின், அவன் விலங்கைவிட மிகத் தாழ்வுள்ளவனாகவே கருதப் பெறுவான்; மதிக்கப் பெறுவான்.

மாந்தன் எல்லாத் துறைகளிலும் மேம்பாடுற்று விளங்குகின்றான். தன் உடற் சட்டைகளை மிகமிக மெல்லியனவாகவும் பளபளப்பு மிக்கனவாகவும் தைத்துப் போட்டுக்கொள்கின்றான். ஆனால் அவனின் உள்ள உணர்வுகளோ மிகமிகத் தடிப்பேறி இருள் மண்டிக் கிடக்கின்றன. அவன் கால் சட்டைகள் மிக நீண்டு கிடக்கின்றன; நடையோ மிகவும் குறுகிக் கிடக்கின்றது. உலகம் முழுவதையும் ஒரு நொடியிலேயே அவன் அறிந்து கொள்ளத் துடிக்கின்றான்.

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரன்.**
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

ஆனால் தன் அண்டை அயலில் உள்ளவர்களை ஒரு நொடிப் பொழுதேனும் காணவோ கருதவோ மறுக்கின்றான். வாய்க்குச் சுவையான வற்றையும், உடலை வலுப்படுத்தும் மருந்து வகைகளையும் வேளை தவறாமல் தின்னத் துடிக்கின்றான். ஆனால் தன் உள்ளத்திற்குச் சுவையானவற்றையும் உள்ள உணர்வுகளை வலுப்படுத்திச் செப்பப் படுத்துவனவற்றையும் பற்றிக்கொஞ்சமும் கவலையின்றித் திரிகின்றான். அளவில்லாமல் குழந்தைகள் பிறக்கின்றன; ஆனால் ஆயிரத்தில் ஒன்றேனும் நல்ல உடல் நலமுள்ளதாகவோ அறிவுடையதாகவோ இருப்பது அரிதாகின்றது பெண் குழந்தைகள் ஆண் குழந்தைகளைப்போல் உருவத்தாலும், மனநிலையாலும் பேணி வளர்க்கப் பெறுகின்றன. ஆனால், ஆண் குழந்தைகளோவெனின் உருவம், மன நிலை இவ்விரண்டினாலும் பெண்மை சான்றவைகளாகவும், கோழைகளாகவுமே வளர்கின்றன.

இளைஞர்கள் தங்களைப் பெண்களைப்போல் ஆடை யணிகலன்களாலும், புனைவு பூசல்களாலும் அழகு செய்து கொள்ளும் மன நிலையைப் பெற்றிருக்கின்றனர். வினைப்பாடுகளில் அவர்கள் ஒருசிறிதும் கருத்துச் செலுத்துவதே இல்லை. கல்வி கேள்விகளிலும், கலைநுட்பங்களிலும் அவர்கள் நாட்டஞ் செலுத்துபவராகத் தெரியவில்லை. பொதுவில் அவர்கள் தங்களைத் தாங்களே பேணிக் கொள்ளத் தெரியாத மூடங்களும் முடங்களாகவுமே வாழ்ந்து, தங்கள் மேல் இரக்கப்பட்டுப் புரத்தல் செய்கின்றார் தம் தோள்களையும் முதுகுகளையும் அழுத்துகின்ற பெருஞ்சுமைகளாகவுமே இருந்து வருகின்றனர். இன்றைய நாகரிகக் காலத்தில் உள்ள ஓர் இளைஞன், தன் தலைமயிரை எவ்வாறு கறுப்பாகவும், சுருள்சுருளாகவும், நீளமாகவும் அழகாகவும் வைத்துக் கொள்வது என்பதில் செலுத்தும் கருத்திலும் கவனத்திலும் நூற்றில் ஒருபங்கேனும் தான் மேற்கொண்ட வினைப்பாட்டை எவ்வாறு செப்பமாய்ச் செய்து முடிப்பது என்பதிலும் அதனால் விளையப்போகும் பயன் எவ்வளவு என்பதிலும் செலுத்துவதில்லை.

இக்காலத்து இளம்பெண் ஒருத்தி ஓர் ஆணுக்குரிய அத்தனை இலக்கணங்களும் தனக்குப்பொருந்தி யிருப்பதாகவே எண்ணித் தருக்குக் கொள்ளுகிறாள். ஆணோடு பெண் சம உரிமை வாய்ந்தவள் என்பது வேறு அவனுடைய உடற் கூறுபாட்டிலக்கணங்களைத்தான் பெறுவதென்பது வேறு, என்பதை அவள் ஒப்புக்கொள்வதில்லை. தன்னை ஒரு புனைவுப் பாவையாக, கவர்ச்சிப் பொருளாக ஆக்கிக்

கொள்வதில் அவளுக்குள்ள நாட்டமும் முயற்சியும், தன் பெண்மைத் தன்மையையும் தன்னுள் மறைந்திருக்கும் தாய்மைத் தன்மையையும் பேணிக் கொள்வதிலும் இவ்வுலகின்வாழ்வு மலர்ச்சிக்குத்தான் ஓர் இன்றியமையாத உறுப்பாக விளங்கவேண்டும் என்பதற்காகவே தன்னை இயற்கை படைத்திருக்கின்றது என்னும் உண்மையிலும் அவளுக் கிருப்பதில்லை. தான் ஒரு தனித்தன்மை பெற்ற உயிர்ப்பொருள் என் பதையறியாமல் தன்னோடு ஒத்ததும், ஆனால் வேறொரு தனித்தன்மை யும் இயற்கைக் கூறுபாடும் வாய்ந்து வேறோர் உயிர்ப் பொருளாக விளங்குவதுமான ஆண்மையை, தனக்கெதிராக வந்து நிற்பதும், தான் வெல்லத் தகுந்ததுமான ஒன்றாகக் கருதி வாழ்க்கை முழுவதையும் போராடியே கழிக்கின்றாள். போலிச் சீர்திருத்தக்காரர்களின் பகுத்தறிவென்னும் மெய்ப்பொருளற்ற பருமஅறிவால் தன்னை மிகவும் கீழ்ப்படுத்திக் கொள்ளும் இக்கால ஆடவரையும் பெண்டிரையும் எவ்வாறு உய்விப்பது என்பதே சான்றோர்களுக்கிருந்து வரும் பெருங் கவலையாகும்.

இக்கால் உள்ள தலைவர்கள் மக்களுக்குத் தகுந்த வழி காட்டி களாக அமையாதது பெரிதும் வருந்தத் தக்கது இளைஞர்களுக்கும், முதிர்ந்த அறிவுடையவர்களுக்கும் இடையில் இத்தலைவர்களும், அரசி யல் புரட்டர்களும் கனத்த ஒரு திரைபோல் இருந்து வருகின்றனர். இளைஞர்கள் அறிவை நாடிப் போகும வழியில், இத்தகையோர் அவர் களின் குறுக்கே பாய்ந்து, அவர்களைத் தங்கள் தங்கள் நலன்களுக் காகப் பயன்படுத்திக் கொள்ளும் நிலை என்று மாயுமோ, அன்று தான் எதிர்கால உலகத்திற்கு ஒரு விடிவு ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லாம்.

அறிவியல் வளர்ந்துள்ள இவ்வுலகம் ஓர் ஆரவாரப் பொருட் காட்சியாக விளங்குகின்றதே தவிர, அமைதி நிறைந்து மனத்துக்கு இன்பமளிக்கும் ஓர் இயற்கைச் சோலையாக விளங்கவில்லை என்பதை யாவரும் அறிந்து வருந்தும் நாள் ஒன்று வரும் பசியெடுக்கின்ற வரையில் தன் கையில் கிடைத்த விளையாட்டுப் பொருள்களிலேயே காலங் கடத்தி மகிழும் ஒரு குழந்தை பசியெடுத்தவுடன் அவற்றைத் தூக்கி யெறிந்துவிட்டுத் தாயை நாடி அழுது கொண்டு ஓடுவதைப் போல், இக்கால அறிவியல் மேம்பாடுகளை யெல்லாம் புறத்தேதள்ளி விட்டு இப்பொழுதுள்ள மாந்த இனம், ஒருநாள் தன் உள்ளப் பசியின் இயற்கைக் கிளர்வால் அழுது புலம்பத்தான் போகின்றது. அதுவரை அறிவியல் துறைகளிலோ, பிறவற்றிலோ, நாம் எத் துணைதான் உயர உயரப் பறந்தாலும் ஒரு பயனும் விளையப் போவ தில்லை என்றுதான் சொல்லுதல்வேண்டும். —பெருஞ்சித்திரன்

தமிழ்!

0 தமிழ் மிகவும் பண்பட்ட மொழி.

—மாக்சுமுல்லர்.

0 தமிழ்மொழி வேறு எந்த மொழிக்கும் தாழ்ந்த மொழியன்று.

—போப்.

0 தமிழ், நிறைந்து, தெளிந்து, ஒழுங்காய் வளர்ந்துள்ள மொழிகள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்த ஒரு மொழி.

—டெய்லர்,

0 தமிழ் பண்டையது; சிறப்பு உடையது; உயர்வடைந்தது விரும்பினுல் வடமொழி உதவியின்றித் தனித்து இயங்க வல்லது.

—கால்டுவெல்.

0 எண்ணுவதற்கும், பேசுவதற்கும் வேறு எந்த ஐரோப்பிய மொழியையும்விடச் சிறந்த மொழி தமிழ் மொழி.

—விட்னி.

0 திரவிட மொழிகளுள் தமிழ்மொழியே மிகத் தொன்மை வாய்ந்ததும், பெருவளம் பொருந்தியதும், மிகவும் சீர்திருத்த முற்ற உயர்தனிச் செம்மொழியும் ஆகும். சொல்வளம் மிகுந்து அளவிட வொண்ணுப் பண்டைக் காலந் தொட்டுப் பயின்று வருவதுமாகும்,

—கிரையர்சன்.

0 திரவிட மொழிகள் எல்லாவற்றுள்ளும் மக்கள் பேசும் மொழிக்குரிய தன்மையைப் பெற்றுள்ள மொழி தமிழ் ஒன்றே யாகும். தருக்க முறையில் அமைந்ததும் அம்மொழியே யாகும்.

—சிலேட்டர்.

தொகுப்பு: அல்லூர் மு. பெரியசாமி.

நினைவில் நிற்கட்டும்.

தொகுத்தவர் : அல்லூர். மு. பெரியசாமி.

திருக்குறளை ....

1730-ஆம் ஆண்டு "இலத்தீன் மொழியில்" மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர்.

1803-ஆம் ஆண்டு "செர்மன் மொழியில்" மொழி பெயர்த்தவர் ஏ. எஃப். காமரெச்.

1812-ஆம் ஆண்டு "ஆங்கில மொழியில்" மொழி பெயர்த்தவர் எல்லிசர்.

1812-ஆம் ஆண்டு "ஆங்கில மொழியில்" மொழி பெயர்த்தவர் சி. இ. கவர்.

1812-ஆம் ஆண்டு "ஆங்கில மொழியில்" மொழி பெயர்த்தவர் டபிள்யூ. எச். ட்ரு

1852-ஆம் ஆண்டு "பிரெஞ்சு மொழியில்" மொழி பெயர்த்தவர் ஏரியல்.

1856-ஆம் ஆண்டு "பிரெஞ்சு மொழியில்" மொழி பெயர்த்தவர் கிரால்.

1867-ஆம் ஆண்டு "பிரெஞ்சு மொழியில்" மொழி பெயர்த்தவர் எம். லெமரோச்.

1887-ஆம் ஆண்டு "தெலுங்கு மொழியில்" மொழி பெயர்த்தவர் கனுப்பர்த்தி வேங்கட்ட இராம வைத்தியநாதர்.

1896- ஆம்ஆண்டு "ஆங்கில மொழியில்" மொழி பெயர்த்தவர் சி. யு. போப்யைர்.

1896-ஆம் ஆண்டு "ஆங்கில மொழியில்" மொழி பெயர்த்தவர் திரு. வ வே. சு. ஐயர்.

1915-ஆம் ஆண்டு "மலையாள மொழியில்" மொழி பெயர்த்தவர் திவான் பகதூர் கோவிந்தப் பிள்ளை

1922-ஆம் ஆண்டு "வடமொழியில்" மொழி பெயர்த்தவர் திரு. அப்பாதீட்சதர்.

1924-ஆம் ஆண்டு "இந்தியில்" மொழி பெயர்த்தவர் சோமானந்தராகத்.

1963-ஆம் ஆண்டு "உருசிய மொழியில்" மொழி பெயர்த்தவர்கள்: சிலோசான்; யூரிகிளாசோவ்.

1969-ஆம் ஆண்டு "உருசிய மொழியில்" மொழி பெயர்த்தவர் ஏ. இப்ராகிமோவ்.

பயன் மொழிகள்.

0 கரிசுக்கு (பாவத்திற்கு) அஞ்சித் திருடாதவனும், காவலுக்கு அஞ்சித் திருடாதவனும், உதைக்கு அஞ்சித் திருடாதவனும், சாவுக்கு அஞ்சித் திருடாதவனும் ஒரே வகைத் தகுதி உடையவர்களே!

---பெரியார் ஈ. வே. இரா.

0 பசியோடு கிடக்கும் பாட்டாளியிடம் சென்று பரமன் புகழ் பாடுவது பயனற்றது. 'வேத' நெறிகள் பேசுவது வீண்! அவன் கேட்பது உணவு, உடை, இடம்; வேத விளக்கம் அன்று!

—சவகர்லால் நேரு.

0 அடிமையின் அழகு மாளிகையில் தலை வணங்கி வாழ்வதை விட, இடிந்து பாழடைந்த உரிமை இல்லத்தில் தலைநிமர்ந்து வாழ்வதே சிறந்தது. —மூர்.

0 மாந்தன் உரிமையோடு பிறக்கிறான். ஆனால், எங்கும் அடிமைத் தளைகளில் பிணைப்புண்டு கிடக்கிறான். —உருசோ.

0 வாழத் தெரிந்தவர்கள் உலகத்தோடு ஒட்ட ஒழுகக் கற்றுக் கொண்டுவிடுகிறார்கள், வாழத் தெரியாதவர்கள் உலகத்தையே தம் பக்கம் திருப்பிக் கொள்ளப் பார்க்கிறார்கள். எனவே உலக முன்னேற்றம் வாழத் தெரியாதவர்களைத்தான் பொறுத்திருக்கிறது.

—பெர்னாட்சா.

0 விளைவு செய்தவனுக்குத்தான் பொருள்கள் சொந்தம். எதிர்பாராத வகையில் நிலைமை அப்படி இல்லை. ஒரு சிலர் உழைக்க வேறு சிலர் பயன் பெறுகிறார்கள். இது வஞ்சனையும் ஏமாற்றுதலுமாகும். ஆதலால் இதை நீடிக்கவிடக் கூடாது.

—ஆபிரகாம் இலிங்கன்.

0 எங்கே மாந்தன் உழைப்பை மாந்தன் சுரண்டுவது இல்லையோ, எங்கே சிலர் பலரை அடக்கி ஆள்வது இல்லையோ, எங்கே ஏழ்மையும் இல்லாமையும் இல்லாமல் இருக்கிறதோ, அங்கே தான் உண்மையான மக்களரசு மலரும். —இலெனின்.

தொகுப்பு-அரியநகர் 'புகழ்'

0 அறிவு, அழகு, நல்லொழுக்கம் இவற்றின் வளர்ச்சியே கல்வி; இம்மூன்றிலும் மிகச் சிறந்தது நல்லொழுக்கமே.

—எலன் கெல்லர்.

0 தெளிவான பேச்சு, தூய்மையான உள்ளத்தின் எதிரொலி.

—வில்லியம்சா.

0 எதை நன்ருக எண்ணுகிருேமோ அதையே தெளிவாக எழுத முடியும்.

—பாய்லோ.

0 நிறைய எண்ணு; குறைவாகப் பேசு; அதனினும் குறைவாகவே எழுது.

—இத்தாலியப் பழமொழி.

0 நல்ல நடை எழுதத் தேவையானவை மூன்று. அவை :— 1) சிறந்த நூல்களைப் படிப்பது. 2) சிறந்த நாவலர்கள் பேசும் பொழுது உற்றுக் கேட்பது. 3) அடிக்கடி எழுதிப் பழகுவது.

—பென்சான்சன்.

0 சிறந்த பொத்தகம் ஒன்றைப்போல் சிறந்த நண்பனும் உறவினனும் இந்த உலகிலேயே எனக்கில்லை.

—துயூப்பர்,

0 பல தன்மை வாய்ந்த பல நண்பர்களின் நட்பை விடப் பொறுக்கி எடுத்த சில பொத்தகங்களின் உறவு மிக்க நன்மை அளிக்கும்.

—கால்டன்.

0 சிறந்த எழுத்தாளன் படிப்போருடைய நல்ல நண்பனும், சிறந்த வள்ளலுமாவான்.

— மக்காலே.

[தொகுப்பு : அல்லூர் மு. பெரியசாமி.]

கழுதை அழுத கதை!

பல வகையான வினையமுத்தங்களாலும், வெளியூர்ச் செலவுகளாலும் 'கழுதை அழுத கதை' என்னுங் கதைத் தொடர் இவ்விதழிலும் வெளி வரவில்லை. அத்துடன் பொறுத்தற்கியலாத காலத் தாழ்த்தமும் இவ்விதழ் வெளிவருவதில் ஏற்பட்டுள்ளது. அன்பர்கள் பொறுத்தருள்க.

— ஆசிரியர்.

சீனம்.

0 ஆசியாக் கண்டத்திலுள்ள பழமையான நாடு. உலகில் உருசியாவுக்கு அடுத்த பெரிய நாடு.

0 பருவக் காற்று நாடுகளில் ஒன்ருகும்.

0 மக்கள் பெருக்கம் 60 கோடியாகும். மக்கள் சீனர், மங்கோலியர், மற்ற முரட்டு இனத்தினர் ஆவார்கள். முழுவதும் சீன மொழியையே பேசுகின்றனர்.

0 இங்கு கோயாங்கோ, யாங்டிசிக்கியாங்கு, சிக்கியாங்கு போன்ற பேராறுகள் பாய்கின்றன. யாங்டிசிக்கியாங்கு சிக்கியாங்கு ஆறுகளில் பல இலக்கக்கணக்கான மக்கள் படகு வீடுகளில் வாழ்கின்றனர்.

0 "பீக்கிங்கு" இந்நாட்டின் தலைநகரமாகும்.

0 வட சீனுவில்தான் உலகின் பெரிய மதிற்சுவர் அமைந்துள்ளது.

0 "கோயாங்கோ ஆறு" சீனுவின் துயரம் எனப்படும்.

0 காண்டன் நகரில் மக்கள் கப்பல்களில் குடும்பங்களுடன் வாழ்கின்றனர். இது "மிதக்கும் நகரம்" என்றும் வழங்கப்படுகின்றது.

0 இந் நாட்டில் நிலக்கரி, இரும்பு, வெள்ளீயம், செம்பு ஆகிய மாழைகள் கிடைக்கின்றன.

0 இங்கு உண்டாக்கப்படும் பட்டு மிக உயர்ந்ததாகும்.

0 கான்பியூசியசு என்ற அறிஞர் இந் நாட்டைச் சேர்ந்தவர். இவர் தொகுத்த நூல் உலகின் மிகப் பழைய நூலாகக் கருதப்படுகின்றது.

0 சீனர்களின் நாகரிகம் திராவிடர்களின் பழமையான நாகரிகத்தின் ஒத்த சிறப்புடையது.

0 மக்கள் பெரும்பாலும் புத்த சமயத்தைப் பின்பற்றியவர்களாக இருக்கின்றனர்.

0 கப்பல்களுக்குத் "திசைக் காட்டும் கருவியைக்' கண்டுபிடித்துக் கொடுத்தது சீனமே ஆகும்.

0 வெடி மருந்தை முதலில் கண்டறிந்து பயன்படுத்தியர்களும் சீனர்களே ஆவார்கள்.

0 "சீனி"யை உலகினுக்கு அளித்ததும் சீன நாடே ஆகும்.

0 இதன் வரலாறு தி. மு. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிறபபுடையது.

[தொகுப்பு. சு. வேல்முருகன், மதகடிப்பட்டு]

எண்ணும் எழுத்தும்

—பாவை-நடவரசன்.

பசுங்கதிரன் என்பான் படகோட்டியின் மகன் ஆவான்; பள்ளிப் படிப்பினை முடித்த மாணவன் ஆவான். அவன் வேலை ஏதும் கிடைக் காமையால் நாளை வீணாக்காமல் நல்ல துணையாகத் தந்தைக்குத் துணை செய்தான். காவிரி ஆற்றில் அமைந்திருக்கும், திருஈங்கோய் மலைத் துறைக்கும் திருப்பராய்த் துறைக்கும் இடையே தந்தையுடன் படகு செலுத்திக் கொண்டிருந்தான். பின்னர், தானே படகு ஒன்று வாங்கித் தனியாக ஓட்டினான்.

ஒருநாள் பசுங்கதிரன் படகு, திருப்பராய்த் துறையில் வந்து நின்றது. அதில் வந்தவர்கள் இறங்கினார்கள். உடனே படித்த குடும்பம் ஒன்று அதில் ஏறி அமர்ந்தது. பசுங்கதிரன் விரைவாகத் துடுப்புகளைத் தள்ளினான். பாய்ந்து வரும் ஆற்றின் குறுக்கே வாத்தைப்போல் அந்தப் படகு நீந்திச் சென்றது. அதில் அமர்ந்திருந்த ஆசிரியர், பசுங்கதிரன் தள்ளுகின்ற துடுப்புகளைப் பார்த்தார். ஒரு துடுப்பின்மேல் 'எண்' என்றும், மற்றொரு துடுப்பின்மேல் 'எழுத்து' என்றும் எழுதியிருப்பதைக் கண்டார்.

"தம்பி! ஒரு துடுப்பில் 'எண்' என்றும், மற்றொரு துடிப்பில் 'எழுத்து' என்றும் எழுதியிருக்கிறாயே! அதற்கு என்ன பொருள்?" என்று கேட்டார், ஆசிரியர்.

ஆசிரியர் கேட்ட கேள்விக்கு விடை ஒன்றும் சொல்லாமல்; தன் இடக்கையால் தள்ளிய 'எழுத்து' என்ற துடுப்பினைத் தள்ளாமல் விட்டுவிட்டான். அதனால் அந்தப் படகு என்ன ஆயிற்று தெரியுமா? ஆடத் தொடங்கியது. ஆடிச் சுற்றவும் தொடங்கியது. அதனுள் இருந்த குடும்பத்தார் நிலையோ............சொல்ல முடியாத நிலை. எல் லாரும் அஞ்சி 'ஐயகோ!' எனக் கத்தினார்கள். உடனே அந்தத் துடுப் பினைக் கையால் பிடித்துத் தள்ளினான், பசுங்கதிரன். மீண்டும் படகு நீந்திச் சென்றது.

விடை சொல்ல வாய்திறவாமல் இருந்த பசுங்கதிரன், வாய் திறந் தான்; "ஐயா! 'எழுத்து' என்ற ஒரு துடிப்பினை விட்டவுடனே இந்தப் படகு ஆடிய ஆட்டத்தைப் பார்த்தீர்கள். அதே போலத்தான் 'எண்' என்ற துடுப்பினை விட்டாலும் படகு ஆடிவிடும். இரண்டையும் விட்டுவிட்டாலோ ஆற்றோடு எங்கோ சென்று, மோதிக் கவிழ்ந்து விடும். பள்ளியில் படித்தபொழுது எங்கள் தமிழாசிரியர் எண்ணையும் எழுத்தையும் நம் இரு கண்கள் என்றார். ஆனால், எனக்கோ இந்தப் படகின் இரு துடுப்புகளே இரண்டு கண்களாகத் தெரிகின்றன. எப்படி

ஒரு துடுப்பு இல்லை என்றாலும் படகு ஆடிச் சுற்றுகிறதோ, அப்படி எண் எழுத்தில் ஏதாவது ஒன்று இல்லை என்றாலும், ஒருவனின் வாழ்வு ஆடத் தொடங்கிவிடும்; அழகற்றதாய்ப் போய்விடும். அதை நன்றாக உணர்ந்தேன். அதனால்தான், இப்படி எழுதினேன்'' என்று விளக்கிக் கூறினான்.

படகும் திருவீங்கோய்மலைத் துறைக்கு வந்து நின்றது. ஆசிரியர் அதிலிருந்து இறங்கிக்கொண்டே, ''தம்பி! எத்தனையோ மாணவர்களுக்கு இந்தக் குறட்கருத்தை விளக்கிச் சொல்லியிருக்கின்றேன், அப்பொழுதெல்லாம் நான் சொல்லாத பொருள் நயத்தை, இப்பொழுது நீ சொல்லியிருக்கிறாய்: வாழ்க்கை என்னும் ஆற்றில், வாழ்வுஎன்னும் படகு செல்வதற்கு, எண், எழுத்து என்னும் இரு துடுப்புகள் இன்றியமையாதனவாகும். இந்த உண்மையை—உவமையை இனி, என்னால் மறக்கவே முடியாது'' என்று கூறிவிட்டு மலையை நோக்கி நடந்தார்.

திருவீங்கோய் மலைமீது ஏறி, ஆற்றை நோக்கிப் பார்த்தார், ஆசிரியர். பலரை ஏற்றிக் கொண்ட அந்தப் படகு, தன் இரு துடுப்புகளாலும் ஆற்றை எளிதாகக் கடந்து கொண்டிருந்தது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

வெள்ளமா? வெல்லமா?

1919-ஆம் ஆண்டு. 'போசுட்டன்' என்ற நகரிலே ஒரு பெரும் வெள்ளம் ஏற்பட்டது. அதைக் கண்ட அனைவரும் என்ன இது வெல்லமே வெள்ளமாக வந்து விட்டதா என எண்ணினர். காரணம் இதுதான். அந்நகரில் உள்ள பெரிய சாராய ஆலை வெல்லக் கழிவுத் தொட்டி[Tank]களில் ஒன்று, வெள்ளத்தினால் வெடித்து விட்டதின் விளைவாக வெல்லக் கழிவுக் கூழ் நகரெங்கும் பெருக்கெடுத்து ஓடியது. போசுட்டன் நகரம் முழுவதும் மூன்றடி உயரம் வெல்லக் கூழ் நிரம்பி விட்டதாம். அதன் பயனால் பாலங்களும், கட்டடங்களும் இடிந்து விழுந்தன. அவ்வெல்லக் கூழை அகற்றுவதற்கே ஐந்து ஆண்டுகள் பிடித்தனவாம் ஆனால், அதன் நாற்றம்! ஐயகோ! அது மேலும் பல ஆண்டுக் காலம் அந்நகரைச் சூழ்ந்திருந்ததாம்!

—செம்பியன்.

தெரிந்து கொள்ளுங்கள்.

—:0:—

0 உலகிலேயே அரக்கு மிகுதியாகக் கிடைக்கும் நாடு இந்தியா.

0 முதன் முதல் குளம்பி(காபி)க் கொட்டைச் செடியைக் கண்டு பிடித்தது அமெரிக்காவில் உள்ள அபிசீனியாவில்.

0 திருகிறக்கை (Helicopter) ஊர்தியில் உள்ள இறகுகள் இருநூறு கற்கள் வேகத்தில் சுழல்கின்றன.

0 வேல மரத்துப் பிசின் மிகுதியாகக் கிடைக்கும் நாடு எகிப்து.

—தொகுப்பு: ப. ச. கிருட்டிணசாமி.

0 மான் மணிக்கு 30 கற்கள் வேகம் செல்லும்.

0 எமு என்னும் பறவையின் வேகமும் மணிக்கு 30 கற்கள்தாம்.

0 மாந்தன் மணிக்கு நாலரைக் கற்கள் நீந்துவான்.

0 சிறுத்தை ஒரு மணியில் 70 கற்கள் ஓடும்.

0 கடற்பன்றி மணிக்கு நாற்பதரைக் கற்கள் நீந்திச் செல்லும்.

0 துனு என்னும் மீன் ஒரு மணியில் 55 கற்கள் நீந்தும்.

0 தவளை தன் உயரத்தைப்போல் பதினொரு மடங்கு தாவும்.

—தொகுப்பு: வெ. சனகன்.

0 ஆங்கில மொழி தோன்றி 900 ஆண்டுகளே ஆகின்றன.

0 நிலவுலகிற்கு மிக அண்மையில் உள்ள கோள் வெள்ளி.

0 உலகில் உள்ள மிகப் பெரிய பொத்தகசாலை, மாசுக்கோவில் உள்ள இலெனின் தேசியப் பொத்தகசாலையே.

0 மாக்னீசியா நாட்டில் கிடைப்பதாலேயே காந்தத்திற்கு மாக்னெட்(Magnet) என்று பெயர் வந்தது.

0 வெண்கலம் என்பது தனி மாழை யன்று. செம்பும் தகரமும் குறிப்பிட்ட ஓர் அளவில் கலக்கப்பெற்ற மாழை(உலோகம்) அது.

—தொகுப்பு: தமிழன்பன்.



பெரியோர் கதை!

அடிமை தவிர்த்த ஆபிரகாம் இலிங்கன்

மூ. மகிழரசன்.

செந்தமிழ்ச் செல்வங்களே! சென்ற நூற்றாண்டுவரை அமெரிக்காவில் மாந்தனை மாந்தன் அடிமைப்படுத்திக் கொடுமைப் படுத்தும் மடமை பெரிதும் பெருகிக் குடிகொண்டு இருந்தது. அக்காலத்தில் ஆப்பிரிக்காவின் 'நீக்ரோ' என்ற கருப்பர் இனத்து எழை மக்களை ஆங்கிலேயர், ஆடுகள் மாடுகள் வாணிகம் போல, விலைக்கு விற்பதும் வாங்குவதும், தம் விருப்பம் போல் அவர்களைத் துன்பப்படுத்தி வேலை வாங்குவதும் ஆகிய கொடுமைகளைச் செய்து வந்தனர். இந்தக் கொடுமைகளை எதிர்த்து, அதிர்த்து அடிமைத் தளையை அறுத்து எறிந்து எரித்தார். அமெரிக்காவின் மக்கள் தலைவர் ஆபிரகாம் இலிங்கன்.

ஆபிரகாம் இலிங்கன், கெண்டக்கி என்ற மாநிலத்தில் ஓட்டுகென்சுவில்லி என்ற ஊருக்கு அருகில் 1809-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 12-ஆம் நாள் ஞாயிறு அன்று பிறந்தார், வழிவழியாய் உழவுத் தொழில் செய்தது வந்த ஏழைக் குடும்பத்தில் தான் அவர் பிறந்தார். மக்காச் சோளக் காய்கறிகள், காட்டுக் கனிவகைகள் மீன் இவையே அங்கு ஏழையர் உணவுப் பொருள்களாய் இருந்தவை ஆகும். புலிக்குப் பிறந்தது பூனை ஆகாது என்பதைப் போலக் கடின உழைப்பாளர் குடியில் பிறந்த நம் ஆபிரகாமும் இளமையிலேயே கடின உழைப்பாளனாக வளர்ந்தார். உழைப்பில் பழக்கமும் ஊக்கமும் மிகுந்து இருந்த அதே நேரத்தில் அவருக்குக் கல்வி கற்பதில் அளவில் அடங்காத ஆர்வமும் தனிமுயற்சியும் நிறைந்து இருந்தன. தம் மூன்றாம் அகவை முதலே அவர் கழனியிலும் வீட்டிலும் தம் பெற்றோர்க்கு உதவியாக இருந்தாராம்!

நாளொன்றுக்கு இரண்டு கல் தொலைவு நடந்து சென்று 'நாப் கிரீக்கு' என்ற சிற்றூரில் முதன் முதலாகக் கல்வி பயிலத் தொடங்கினார் ஆபிரகாம். அங்குக் குறைந்த கல்வியே கற்க வாய்ப்பு இருந்தது. அதையும் தொடர்ந்து பயில இயலாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அவருடைய தந்தை இண்டியானா என்ற ஊருக்குச் செல்ல

நேர்ந்து விட்டதே காரணம். ஆபிரகாம், பள்ளி சென்று பெற்ற கல்வி மிகச் சிறிதே ஆகும். தம் வாழ்நாள் முழுதும் அவர் நான்கு மாதங்களே பள்ளி சென்று கல்வி கற்க வாய்ப்புப் பெற்ருர். ஆனுலும் தம் சொந்த முயற்சியாலேயே மிகுந்த ஆர்வத்துடன் பெருங் கல்வி பயின்ருர். பிற்காலத்தில், அவர் தாமாகவே முயன்று சட்டத்தையும் கற்ருர்; பட்டத்தையும் பெற்ருர். அவர் சிறுவனுக இருந்த போது, எவ்வாறு அரும்பாடுபட்டுப் பெரும் ஈடுபட்டுக் கல்வியைப் பயின்ருர் என்ற கதையைத் தமிழ்ச்சிட்டு முன்பே உங்களுக்குச் சொல்லி இருக்கிறது அல்லவா?

ஆபிரகாம் இளேஞனுக இருந்த போழ்து பலவகைத் தொழில்களிலும் ஈடுபட்டு வல்லவராகத் திகழ்ந்து இருந்தார். கடின உழைப்புகளான கழனி வேலேகளில் உழவனுகவும், காட்டில் மரங்களே வெட்டும் விறகு வெட்டியாகவும் திறம் கொண்டு இருந்தார். தம் தந்தையிடம் தச்சு வேலேயையும் கற்றுத் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் சிறிது காலம் ஆடு மாடுகளே அறுக்கும் அறுவையாளன் (கசாப்புக்காரர்) ஆகவும் இருந்தார். பின்னர், பிறர் நிலத்து விளேபொருள்களே வேற்றூர்க்கு எடுத்துச் சென்று விற்பனே செய்யும் வணிகனுகவும் இருந்தார். இவ்வாறு பல தொழில்களிலும் ஆபிரகாம் ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் பிறரிடம் கூலிக்கு உழைத்தபோது தாம் பெறும் ஊதியத்திற்குப் பொருந்த நேர்மையாக உழைத்தார். அவர் ஒரு சிறந்த குத்துச்சண்டை மறவராகவும், ஓட்டம் முதலிய விளேயாட்டுத் திறவராகவும் திகழ்ந்து இருந்தாராம்!

ஆபிரகாம் இலிங்கன் மிக்க இரக்கமுள்ளவராகவும் இளகிய நெஞ்சினராகவும் இருந்தார். ஒரு முறை இரவில், ஒரு குடிகாரன் தன் நிலே இழந்து புழுதியில் புரண்டு கிடப்பதைக் கண்டார். அவரோடு வந்த மற்ற இளேஞர்கள் உதவாமல் போய்விட்டபோதும் அவர் மட்டும் தனியாகவே அந்தக் குடிகாரனேத் தம் தோள்மீது தூக்கிச் சென்று ஓர் அறையில் ஏந்தாக (வசதியாக) உறங்கச் செய்து உதவினுர். தம் பத்தொன்பதாவது அகவையில் 'புது ஆர்லியன்' என்ற நகர்க்கு வணிகனுகச் சென்றிருந்தபோது அந்த நகரில் அடிமைகள் என்ற பெயரில் மாந்தரை விற்பதும் வாங்கு வதுமாகிய கொடுமைச் செயல்களேக் கண் முன்னர் கண்டு உள்ளம் வருந்தினுர். எனவே அவர் 'வாய்ப்புக் கிடைக்குமானுல் இந்த அடிமை விலங்கை அறுத்து ஒழிப்பேன்' என்ற உறுதியைத் தம் நெஞ்சினில் கொண்டார்.

புதுச் சேலம் (அமெரிக்காவிலும் ஒரு சேலம் இருக்கிறது!) என்ற இடத்தில் சரக்கு மண்டி (Store room) ஒன்றில் பணியாற்றிய போது, ஆபிரகாமின் அரசியல் வாழ்வு தொடங்கியது. நாளடைவில்

அவரை நண்பர்கள் தேர்தலில் நிற்கத் தூண்டினர்கள். எனவே 'இலியனுய்சு' சட்டமன்றத்திற்கு ஆபிரகாம் இலிங்கன் போட்டியிட்டார். அவருடைய தேர்தல் பேச்சு ஒன்று வேடிக்கையாக உள்ளது. "பெரியோர்களே! தோழர்களே! நான் யார் என்று நீங்கள் அறிவீர்கள் என்று நினைக்கின்றேன். நான்தான் பணிவுள்ள ஆபிரகாம் இலிங்கன். நண்பர்கள் என்னைச் சட்டமன்றத்துக்குப் போட்டி இடுமாறு தூண்டினர்கள். என்னுடைய அரசியல் கொள்கை, ஒரு முதுகிழவியின் நடனத்தைப்போல மிகச் சிறியதும் இனியதும் ஆகும். நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் நன்றி உள்ளவனுக இருப்பேன்; இல்லையென்றால்............எல்லாம் ஒன்றுதான்".

இந்த முதல் தேர்தலில் ஆபிரகாம் தோற்று விட்டார்; ஆதலால் மீண்டும் வேறு தொழில்களில் ஈடுபட்டார். பின் அஞ்சலகத் தலைவராகவும், துணை அளவையாளர் (Assistant Surveyor) ஆகவும் அமர்த்தப்பட்டார். பின் மீண்டும் அவர் 1834-ஆம் ஆண்டில் தேர்தலில் போட்டியிட்டு வென்றார். பின்வந்த தேர்தல்களிலும் வெற்றி பெற்றார். இவ்வாறு அவர் தம் அரசியல் வாழ்வில் தேர்ச்சியும் வளர்ச்சியும் பெற்று விளங்கினர். அவர் மேடைப் பேச்சுகள் மிகவும் சுருக்கமானவை; ஆனால் உருக்கமானவை; கருத்துப் பெருக்கமானவை; கொள்கை இறுக்கமானவை; மக்களைக் கவரத் தக்கவை. எனவேதான் 1861-ஆம் ஆண்டில் தம் இறுதிக் கட்டமாக அவர் அமெரிக்காவின் மக்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அமெரிக்க ஒன்றிய நாடுகளின் (United States) கூட்டை வலுப்படுத்துவதும் அடிமைத் தளையை அறுத்தெறிவதும் அவர்தம் இறுதியான உறுதியான கொள்கைகளாய் இருந்தன. அந்நாளில் ஒன்றிய நாடுகளின் வடக்கில் மாந்த அடிமைத் தனத்துக்குப் பெரும்பான்மை எதிர்ப்பும், தெற்கில் பெரும்பான்மை வளர்ப்பும் காப்பும் இருந்தமையால் பூசல்கள் எழுந்து வளர்ந்து கொண்டு இருந்தன. அவற்றின் விளைவாக, ஆபிரகாம் தாம், முழுமையாகப் பதவிப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட சில நாள்களிலேயே வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே பெரும்போர் மூண்டது. நான்கு ஆண்டுகள் தொடர்ந்து நீண்டது. இறுதியில் அடிமை எதிர்ப்புக் கொள்கையாளர்கட்கே வெற்றி கிட்டியது.

எனவே, ஆபிரகாம் இலிங்கனின் விருப்பப்படி 1865-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் மாந்த அடிமைத்தனத்துக்குத் தடை விதிக்கும் சட்டம் இயற்றத் தீர்மானிக்கப்பட்டது. மாந்தனுகப் பிறந்த யாரும் பிறிதொரு மாந்தனுக்கு எவ்வழியாலும் அடிமை இல்லை. அனைவரும் சரிசமம்

என்ற முறைமை நிலைநாட்டப் பெற்றது. தாம் சிறுவனாக இருந்தபோது எடுத்துக்கொண்ட உறுதியைப் பிற்காலத்தில் நிறைவேற்றி விட்டோம் என்ற பெருமையும், மகிழ்ச்சியும், நிறைவும் ஆபிரகாம் இலிங்கன் பெற்றார். வெற்றிப் பெருமிதமும் உற்றார்.

ஆபிரகாம்இலிங்கன், 1865-ஆம் ஆண்டு ஏப்பிரல் 14-ஆம் நாள் மாலையில் நாடக அரங்கு ஒன்றில் அமர்ந்து இருந்தபோது, அடிமைக் கொள்கை வெறிபிடித்த தெற்கினன் ஒருவனால் எதிர்பாராவகையில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் கொலைப்பட்ட செய்தி கேட்டு அமெரிக்க மக்கள் ஆறுத் துயரெய்தித் தீராத் துன்பம் அழுந்தினர்.

'நான் யாருக்கும் அடிமையாக இருக்க மாட்டேன்' என்ற நெஞ் சுரமும் பீடும், 'யாரையும் அடிமைப் படுத்தும் ஆண்டை (Master) யாகவும் இருக்க் மாட்டேன்' என்ற நேர் அறமும் ஈடும் கொண்டு வாழ்ந்தவர் நம் ஆபிரகாம்இலிங்கன். உலகத்துப் பெரியோர்களில் ஆபிரகாம் மிகப் பெரியவர் ஆவார். அப்பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றுக் கதைகளில் ஆபிரகாமின் கதை மிகப் பெரிய கதை; அரிய கதை ஆகும். நம் நெஞ்சங்களை இறுதியில் தொடும் கதையும் ஆகும். ஆகவே நீங்கள் கட்டாயம் வருங்காலத்தில் அவர் வரலாற் றுக் கதையை இன்னும் விரிவாகப் படித்துத் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

செழுந்தமிழ்ச் சிறுவர்களே! நம் நாட்டிலும், ஒரு மாந்தன் தன்னை உயர்ந்தவனாகவும் இன்னொருவனைத் தாழ்ந்தவனாகவும் வேறுபடுத்திக் கொண்டு ஏமாற்றித் திரியும் கீழ்மை நிலை தொடர்ந்து உலவி வருகின்றது. இத்தகைய நிலைக்குக் காரணம் இங்கு மலிந்து கிடக்கும் நமக்குத் தேவை இல்லாத சாதி, குலச் சமய வேறுபாடுகளும் அவை உண்டாக்கிய பழம்பொய்க் கதைகளும் ஆகும். எனவே நீங்களும் இந்தச் சாதி, குலம், சமயம் முதலியவற்றை ஒழித்துக்கட்டி மாந்தர் அனைவரும் பிறப்பால் ஒருநிகர் என்ற உண்மை இயற்கையை நிலைநிறுத்திக் காண நம் ஆபிரகாம்இலிங்கனைப் போல் உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். உள்ளத்தில் நிறுத்திக் கொள்ளுங்கள். இறுதியாய் நிறைவேற்றுங்கள். "நமக்குச் சாதிகள் இல்லை; மதங்கள் தொல்லை. உலகம் அனைத்தும் ஒன்றே. மாந்தர் குலம் ஒன்றே. உயிர்கள் அனைத்தும் ஒன்றே. இறைவன் நமக்கு ஒருவனே! அவன் கோயில் நம் தூய உள்ளமே" என்ற கொள்கையைக் கடைப்பிடியுங்கள். புகழ் அடையுங்கள்.

0

பாராளுமன்றங்கள்.

—இரா. வ. சனார்த்தனம்—

இந்தியாவில் உள்ள பாராளுமன்றம் போல் மாநிலப் படிநிகரா ளியர் அமைந்த மன்றங்கள் ஒவ்வொரு நாட்டிலும் உண்டு. அவற் றிற்கு அவ்வந் நாடுகளில் வெவ்வேறு பெயர்களை வழங்குகின்றனர். அவை இவை :

1.	மேற்கு செருமனில்	...	பண்டசுடாகு.
2.	அமெரிக்கா	...	காங்கிரசு.
3.	பல்கேரியா	...	சூபிரன்சி.
4	பிரான்சு	...	நேசனல் அசெம்பளி.
5.	இசரேல்	...	நெசட்.
6.	இத்தாலி	...	செனட்.
7,	சப்பான்	...	தயட்.
8.	நார்வே	...	இசுடார்டிங்(Startirg).
9.	போர்ச்சுகல்	....	கார்ட்சு.
10.	சுவீடன்	....	இரிக்சுடாக்.
11.	செருமானி	...	இரீசு.
12.	அயர்லாந்து	....	தெய்ல்.
13.	பாரசீகம்	....	மல்லீசு.
14.	பிரிட்டன்	...	பார்லிமென்ட்.
15.	பனித்தீவு (Iseland)	...	ஆல்திங்.

இல்லை! இல்லை!!

பாலாற்றில் பால் இல்லை.
முள்ளங்கியில் முள் இல்லை.
நல்லபாம்பில் நல்லது இல்லை.
செங்கல்லில் கல் இல்லை.
கண்ணுடிவிரியனில் கண்ணுடி இல்லை.
மணிக்கட்டில் மணி இல்லை.
பஞ்சுமிட்டாயில் பஞ்சு இல்லை.
முட்டைக்கோசில் முட்டை இல்லை.
மயிர்மாணிக்கஞ்செடியில் மயிர் இல்லை.
மரவட்டையில் அட்டை இல்லை.

...பின் அந்தப் பெயர்கள் எப்படி வந்தன?

—நாற்றமிகு. செம்பியன்.

நீ, துகள்!

எண்ணருங் கோடி யாண்டாய்
    இருக்கின்றாய் துகளே! – நீ, முன்
விண்ணொடும் விண்ணாய்த் தோய்ந்து
    விசும்பெலாம் உலாவந் தாயோ?
நுண்ணரும் அணுவாய் விண்மீன்
    கூட்டத்தில் நுழைந்து தாவித்
தண்ணருந் துளியாய் மாறித்
    தரைவந்தே இறங்கி னாயோ?

தண்ணருத் துளியாய் நீதான்
    தரைவந்த பின்னை, ஆங்கோர்
திண்ணருங் கல்லுட் பாய்ந்து
    தேய்ந்துரு மாறி மாறி
விண்ணடுங் கிடியி னோடும்
    வெள்ளத்தின் சுழற்சி யோடும்
மண்ணொடும் பெரும்போ ராட்டம்
    மலைந்து,நுண் மணலா னாயோ?

இருண்டநின் கதைதான் என்ன?
    எத்தனை ஊழிக் காலம்
உருண்டனை யோ? வன் பாறை
    ஒன்றினோ டொன்றாய் மோதிப்
புரண்டனை யோ? நுண் தூளாய்ப்
    போயினை யோ? மண் ணோடு
திரண்டொரு குன்றாய் மீண்டுந்
    திணிந்துரு மாறி னாயோ!

மாறுவாய் பின்னும்! ஈண்டோர்
    மலரினும் ஒளிர்வாய்; நீராய்
ஊறுவாய்; உடலுக் குள்ளும்
    உலவுவாய்; தீயுட் பாய்ந்து
வீறுவாய்; காற்றி னூடாய்
    விண்ணுக்கு மீண்டுந் தாவி
ஏறுவாய்; இறங்கு வாய்: நீ
    இறப்பிலா திருக்கின் றாயே!

துரை - மாணிக்கம்.

'தமிழ்ச்சிட்டு'த் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956,
19 ஈ(ஆ) வகுப்பு, 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம்: கடலூர்-1.
2. காலமுறை: திங்கள் ஒருமுறை.
3. அச்சிடுவோர் பெயர்: மா. தாமரை.
   இனம்: தமிழர்
   முகவரி: தென்மொழி அச்சகம், கடலூர்-1.
4. வெளியிடுவோர் பெயர்: திரு. பெருஞ்சித்திரன்.
   இனம்: தமிழர்.
   முகவரி: தென்மொழி அச்சகம் கடலூர்-1
5. ஆசிரியர்பெயர், முகவரி: திரு. பெருஞ்சித்திரன் கடலூர்-1.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர்தம் பெயர்களும், முகவரிகளும்: திரு. பெருஞ்சித்திரன், கடலூர்-1.

பெருஞ்சித்திரனாகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

1—3—71
கடலூர்–1

—பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

வானூர்தி செப்பும் வரலாறு!

—புலவர் பெ. தமிழ்ப்பித்தன்.

பறவை போல இறகுடையேன்;
பறந்து செல்லும் திறமுடையேன்;
பிறரை ஏற்றிச் சென்றிடுவேன்;
பிறையைத் தொட்டு வந்திடுவேன்.

உலகை நொடியில் சுற்றிடுவேன்;
உலகின் உறவை வளர்த்திடுவேன்;
அலகில் மறவர் போர்செய்யும்
அரும்போர்க் களத்தில் உதவிடுவேன்.

காற்றைக் கிழித்துச் சென்றிடுவேன்;
கடலைத் தாண்டிப் பறந்திடுவேன்.
ஆற்றைக் கடந்து சென்றிடுவேன்;
அழகை யெல்லாம் கண்டிடுவேன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர் 1. தமிழ்நாடு.